★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 85630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஐப்பசி 3உ வெள்ளி (19—10—56) ★ ★ வெளியூர்: ஐப்பசி 4உ சனி (20—10—56) [இதழ் 112

குருடர்களுக்கு வேலை: தேயிலைத் தொழிற்சாலையில் ஏற்பாடு!

★

உதகை அக். 18—

டேராடூன் தொழிற் கல்வி நிலையத்தில் பயிற்சி பெற்ற குருடர்களுக்கு உதகைப் பகுதியில், தேயிலைத் தொழிற்சாலைகளில் வேலைதருவதுபற்றிய சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன என்று கூறப்படுகிறது.

வட நாட்டு இந்தி வெறியர் பேய்க் கூச்சல்

இந்தித் திணிப்பு தீவிரமாக நடைபெறவில்லையாம்!

டில்லிசர்க்கார் அசட்டையாயிருக்கிறதாம்

எனவே இந்தியாவெங்கும் போராட்டம் நடத்த வேண்டுமாம்

இந்திப் பிரச்சார மாநாட்டில் தூபம்

ஜெய்ப்பூர், அக். 18—

'இந்தி திணிக்கப்படும் வேகம் போதுமானதல்ல; இன்னும் துரிதமான நடவடிக்கைகளை மேற்கோள்ள வேண்டும்' என்று வடநாட்டு இந்தி வெறியர்கள் கூச்சலிட்டிருக்கின்றனர்.

டில்லி சர்க்கார் இந்தித் திணிப்பிற்காக மேற்கொண்டு வருகிற அவசர அவசரமான நடவடிக்கைகளில் திருப்திப்படாத நிலையில், டில்லி சர்க்காருக்கு எதிராக அவர்கள் பேய்க்கூச்சலிட்டிருக்கின்றனர்.

"இந்தியை 'ராஜ்ய பாஷை'யாக ஏற்றுக்கொண்டு ஐந்தாண்டுகளாகின்றன; ஆனால் சர்க்கார் செய்திருக்கவேண்டிய பல காரியங்களை அது செய்யவில்லை.

'இந்தி வளரவும் அபிவிருத்தியடையவும் காலதாமதமாகலாம்; ஆனால், 15 ஆண்டுகளுக்குள் இந்தி இந்தியாவின் 'ராஜ்ய பாஷை'யாக வேண்டும்; ஆங்கிலத்தின் இடத்தில் இந்தி அமரவேண்டும் என்று அரசியல் சட்டம் விதித்திருக்கிறது; எனவே, அதன்படி இந்தியை ஆங்கிலத்தின் இடத்தில் அமர்த்துவதற்கான தேவையான முயற்சிகளை டில்லி சர்க்கார் இன்னும் மேற்கொள்ளாதது கண்டிக்கத்தக்கதாகும்.

"மேலும், அண்மையில் நடைபெற்ற கல்வி மந்திரிகள் மாநாட்டில் இந்தி பற்றித் தெரிவிக்கப்பட்டிருக்கிற கொள்கையும், மேற்கொள்ளப்பட்ட முடிவுகளும் ஆபத்தானவையாகும்.

"எனவே, டில்லி சர்க்காருக்கு எதிராக நாடெங்கிலும் கிளர்ச்சிகள் — போராட்டங்கள் துவங்க வேண்டும். டில்லி உடனடியாக, 'இந்தி மொழிதான் போதனை மொழியாகவும் இருக்கும்' என்று தனது கொள்கையை வகுத்துக்கொள்ளுமாறு செய்ய வேண்டும்,"

என்று, ஏழாவது அகில இந்திய 'ராஷ்டிர பாஷா' பிரச்சார மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய சேத் கோவிந்ததாஸ் எம்.பி. என்பார் பேசியுள்ளது, வடநாட்டவரின் இந்தி வெறிக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளதாகும்.

தொடர்ந்து பேசிய அவர் குறிப்பிட்டுள்ளதாவது :—

"இந்தி மொழியில் விஞ்ஞானம், மற்றும் இதர இலக்கியங்கள் வளர்ச்சிக்காக டில்லி சர்க்கார் ரூ. 5 கோடி ஒதுக்க வேண்டும்.

"இந்தி மொழியின் வளர்ச்சிப் பாதையில் இன்னும் முட்கள் நிரம்பியிருக்கின்றன என்றாலும், அது 'இராஜ்ய பாஷை' என்ற உயர்ந்த இடத்தைப் பெறுவதினின்றும் உலகில் எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது."

இந்த மாநாட்டைத் துவக்கி வைத்த மத்திய உள்நாட்டு அமைச்சர் பி. என். தத்தாரும், 'இந்தியைத் திணிப்பதில் தீவிரம் வேண்டும்' என்ற வெறியிலேயே பேசியிருக்கின்றார்!

குந்தா திட்டம்

1,45,000 கிலோவாட் மின்சாரம் கிடைக்கக்கூடுமாம்

குந்தா திட்டத்தின்கீழ், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 1,45,000 கிலோவாட் மின்சாரம் கிடைக்குமெனக் கருதப்படுகிறது.

இதற்காக மொத்தம் ரூ. 35,44,00,000 செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

குந்தா திட்டத்தை அமுல் நடத்த இந்த ஆண்டு ரூ 2 கோடி அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

மதுரை மாவட்டத்தில் தேர்தல் ஆய்வுக் குழு

விசாரணை முறையை மாற்றுக் கட்சியினரும் பாராட்டுகின்றனர்

தேர்தல் ஆய்வுக் குழுவினர் 17-10-56 மாலை 6 மணிக்குப் பெரியகுளம் வந்துசேர்ந்தனர் 'டிராவலர்ஸ் பங்களா'வில் நகர தி. மு. கழகச் செயலாளர் அனிபா அவர்களும், பல தொகுதிகளிலிருந்து வந்திருந்த செயலாளர்கள், பிரதிநிதிகள், பிரமுகர்கள் ஆகியோரும் பொதுமக்களும் ஆய்வுக் குழுவினரை வரவேற்றனர்.

ஆய்வுக்குழு, தனது பணியினைத் துவங்குவதற்கு முன், வந்திருந்த அனைவருக்கும் தோழர் என். வி. நடராசன் அவர்கள் ஆய்வுக்குழுவின் பணியினை விளக்கியும், கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும்தர வேண்டிய விவரங்களையும் எடுத்துக்கூறியதோடு, ஆங்காங்குள்ள தோழர்கள் உடனடியாகத் தேர்தல் நிதியைத் திரட்டி தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் வேண்டிக்கொண்டார்.

அடுத்து தேர்தல் ஆய்வுக் குழுவினரான தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், சம்பத், நடராசன், மதியழகன் ஆகிய நால்வரும் பிரத்தியேக அறையில் அமர்ந்து விசாரணையைத் துவக்கினர்.

பெரியகுளம், தேனி, கம்பம், போடிநாயக்கனூர் ஆகிய நான்கு தொகுதிகளிலிருந்து வந்திருந்த கழகத் தோழர்கள், பிரதிநிதிகள் தேர்தல் சூழ்நிலைக்கான விவரங்களைத் தெரிவித்தனர்.

மாவட்டச் செயலாளர் எஸ். முத்து, நகரச் செயலாளர் அனிபா தொகுதிவாரியாக கழகத் தோழர்களை அனுப்பி வைத்தனர். இரவு 10-மணிக்கு ஆய்வுக் குழுவின் பணி முடிவுற்றது.

மதுரையில் :

18—10—56 காலை 10 மணிக்கு தேர்தல் ஆய்வுக் குழுவினர் மதுரை நகர் வந்து சேர்ந்தனர். முனிசிபல் பங்களாவிற்கு வெளியே ஏராளமான பொதுமக்களும் கழகத் தோழர்களும் திரண்டிருந்து உற்சாகத்துடன் வரவேற்றனர். மதுரை நகர் தி.மு. கழகச் சார்பில் ஆய்வுக் குழுவினருக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

பின்னர் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆய்வுக் குழுவினரின் விசாரணையின்போது கழகத் தோழர்கள் தரவேண்டிய விளக்கத்தைக் குறிப்பிட்டுப் பேசியதுடன், தேர்தல் நிதியை வசூலித்துத் தலைமைக் கழகத்திற்கு அனுப்புதல் வேண்டுமென்றும், வசதிப்பட்டவர்கள் ஆய்வுக் குழுவினிடம் இயன்ற அளவு அளிக்கலாம் என்றும் கேட்டுக்கொண்டார்.

அடுத்து, தேர்தல் ஆய்வுக் குழுவினரான இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன், ஈ. வெ. கி. சம்பத், கே. ஏ. மதியழகன் ஆகிய நால்வரும் விசாரணையைத் துவக்கினர்.

திலக்கோட்டை, மதுரை தெற்கு, மதுரை கிழக்கு, மதுரை மேற்கு, மேலூர், வட மதுரை ஆகிய தொகுதிகளிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகள், கழகப் பிரமுகர்கள் தங்களின் கருத்துக்களை தனித்தும், ஒத்தக் கருத்

(4-ம் பக்கம் பார்க்க)

உணவுப் பதுக்கலுக்குச் சர்க்கார் உடந்தையா?

பற்றுக்குறை விவரங்களைப் பகிரங்கமாக்குவது பொறுப்பற்ற செயலாகும்

சர்க்காரின் கொள்கை, பிரச்சினைக்குப் பரிகாரம் தேடாது

உணவுப் பொருட்கள் கொள்ளை இலாப நோக்குடன் பதுக்கப்படுவதற்கு சர்க்கார் உடந்தையா?—என்ற ஐயத்தினை, மாநில உணவுப் பொருள் வர்த்தக சங்கச் செயலாளர் அறிக்கை கிளப்பியிருக்கிறது.

"உணவுப் பொருட்களின் பற்றுக்குறை, தேவையான அளவு, இறக்குமதி செய்யப்படும் அளவு இவை குறித்த விவரங்களை சர்க்கார் பகிரங்கமாக வெளியிடுவது, வேறு எவரையும்விடக் கொள்ளை இலாப நோக்குடைய வியாபாரிகளுக்குத்தான் உதவி செய்வதாகும்,"

என்று, சென்னை மாநில உணவுப் பொருள் வர்த்தகர் சங்க கௌரவ செயலாளர் எம். வ. தங்கப்பன் அவர்கள் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது :—

"உணவுப் பொருள்கள் போக்குவரத்திற்குப் பிராந்தியக் கட்டுப்பாடு விதிக்கப்படுமானால், அது, உணவுப் பொருள் விலை ஏற்றத்தைத் தடுப்பதற்கு உதவாது போகும் என்பது மட்டுமல்ல— சமூக விரோத சக்திகள், தங்கள் சொந்த நலனுக்கு இந்தக் கட்டுப்பாடுகளைப் பயன்படுத்தும் என்பதும் உண்மையாகும்.

"விலைஏற்றத்தைத் தடுத்து நியாயமான விலையில் உணவுப்பொருள்கள் மக்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டுமானால் சர்க்கார் இரண்டு காரியங்களைச் செய்யவேண்டும்.

"தனிப்பட்ட வர்த்தகர்கள் உணவுப்பொருள்களை இறக்குமதி செய்வதற்குத் தாராள அனுமதி வேண்டும் உபரியாகப் பொருள்கள் கிடைக்கும் இடத்திலிருந்து பற்றுக்குறைப் பிரதேசங்களுக்கு அவற்றை எடுத்துச்செல்ல விரை

(4-ம் பக்கம் பார்க்க)

****

21-10-56 :

★

நாட்டுக்கு உயிர் ஈந்த உத்தமர்

சங்கரலிங்கனுர் நாள்

பொதுச்செயலாளர் வேண்டுகோள்

சென்னை மாநிலத்திற்குத் தமிழ் நாடு என்று பெயர் வைப்பதில் தனிப் பெரும் ஆர்வம் கொண்டு அதற்கான முயற்சியில் தன் உயிரையே ஈந்த தமிழ் நாட்டின் உத்தமர் விருதுநகர் தோழர் சங்கரலிங்கனுர் அவர்களுக்கு வீரவணக்கம் தெரிவிக்கவும், அவர் கண்ட கனவை நனவாக்கும் முயற்சியில் நாம் ஈடுபட உறுதி கொள்ளவும், 21—10—56 ஞாயிற்றுக்கிழமையை உத்தமர் சங்கரலிங்கனுர் நாளாகக் கொள்ள வேண்டுகிறேன்.

அன்று, பொதுவாகத் தமிழ்ப் பெருங்குடி மக்கள்—குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள், ஊர்வலங்கள் நடத்துதல், பொதுக்கூட்டங்கள கூட்டுதல் ஆகிய பணிகளின் மூலம், சங்கரலிங்கனுரின் உணர்ச்சியை அரசியலாருக்கு நினைவூட்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகள் இப்பணியை [வாய்ப்புள்ள இடங்களில் பிற கட்சிகளின் கூட்டுறவைப் பெற்று] இனிது நிறைவேற்றி வைக்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

'அறிவகம்'
சென்னை-13
18—10—56

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

****

நம் நாடு

சென்னை 19—10—'56 வெள்ளி

நல்ல எதிர்க்கட்சி!

கட்சி ஆட்சி முறை நிலைத்து நீடித்து நின்று மக்களுக்குப் பயனளிக்கும் அரியதோர் ஜனநாயக அரசு அமையவேண்டும் என்றால், ஆளும் கட்சிக்கு எப்போதும் அச்சமூட்டிக் கொண்டிருக்கத்தக்க பலம் வாய்ந்த—ஆட்சிப் பொறுப்பை எந்த நேரத்திலும் ஏற்க வல்லதோர் எதிர்க் கட்சி அவசியம் வேண்டும்.

இந்தக் கருத்தினை, பொதுத் தேர்தல் நெருங்க நெருங்க எல்லா அரசியல்வாதிகளும் கட்சி பேதமின்றி வலியுறுத்தி வருகின்றனர்.

வேடிக்கை என்னவெனில், எதிர்க்கட்சி ஒன்று உருவாகி வளர உதவவேண்டிய பொறுப்பிலிருந்து தவறிவிட்ட காங்கிரஸ், உருவாகி வளர்ந்துவரும் எதிர்க்கட்சிகளைத் தூஷிப்பதையே தொழிலாகக் கொண்டுவிட்ட காங்கிரஸ் கட்சியில் உள்ள பெருந்தலைகள் முதல் குட்டித் தலைவர்கள் வரையில் இந்தக் கருத்தை ஆதரித்துப் பேசி வருவதுதான்.

தென்னாட்டைப் பொறுத்து—குறிப்பாகத் தமிழகத்தைப் பொறுத்து, ஒரு நல்ல எதிர்க்கட்சிக்குத் தேவையான சகல குணங்களும் இலட்சணங்களும் பொருந்திய கட்சி ஒன்று உருவாகி வளர்ந்துள்ளது; அதுதான் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை முன்பொருமுறை நாம் இங்கு விளக்கியிருந்தோம்.

திராவிட முன்னேற்றக் கழகம், தென்னாட்டில் உள்ள வேறெல்லா அகில இந்திய அரசியல் கட்சிகளினுடையவும் இலட்சியங்களிலிருந்து வேறுபட்டதோர் இலட்சிய அடிப்படையைக் கொண்டது என்பதும், அந்த இலட்சிய ஈடேற்றத்திற்காகத் தோன்றிய நாளிலிருந்து இன்று வரை இடைவிடாது போராடி, அந்த இலட்சிய சித்தியில்தான் தென்னாட்டு மக்களின் பூரண சுதந்திர—நிரந்தர நல்வாழ்வு புதைந்திருக்கிறதென்பதை சகல பகுதி மக்களும் மெள்ள மெள்ள—ஆனால் நிச்சயமாக உணரச் செய்து வருகிறதென்பதும் நாட்டவர் அறிந்தனவாகும்.

அந்த—'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற இலட்சியத்தைக் கொண்ட தி. மு. கழகம், பொதுத் தேர்தலில் பங்கு பெறுவது என்ற ஜனநாயகக் கடமையை நிறைவேற்ற முன்வந்துள்ளது என்பதையும் எல்லோரும் அறிவர்.

'எதிர்க் கட்சி வேண்டும்; அப்போதுதான் சனநாயகம் தழைக்கும்' என்று பேசுகிற அரசியல்வாதிகள், உண்மையில் உள்ளபூர்வமாகவே அந்தக் கருத்தைக் கொண்டிருப்பவர்களானால், தமிழகத்தைப் பொறுத்து, அவர்கள், நமது சனநாயகக் கடமையுணர்வுக்கு மதிப்பளித்தேயாக வேண்டும்.

நாம் தேர்தலில் ஈடுபட வேண்டும் என்ற முடிவு சனநாயகபூர்வமானதோர் முடிவு. 'தேர்தல் என்றால் வெற்றி என்றுதான் பொருள்' என்று எந்த அரசியல் அகராதியும் கூறவில்லை. 'தேர்தல் என்பது ஓர் சனநாயகக் கடமை' என்று நமது அண்ணா அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள்.

சனநாயகம் உரம்பெற்றுள்ள நாடுகளில் மக்கள், ஆளும் கட்சியினருக்குத் தரும் மரியாதையைவிட — அவர்களிடம் கொள்ளும் நம்பிக்கையைவிட, எதிர்க்கட்சியினரிடத்தில் தான் அதிக மரியாதை காட்டுவர்; அவர்களைத்தான் அதிகம் நம்புவர் என்று கூறக்கேட்டிருக்கிறோம். ஏனெனில், ஆளும் கட்சியினரது நடவடிக்கைகளின் தாரதரங்களை எதிர்க்கட்சியினர்தானே உரைத்துக் காட்டுபவர்களாயிருக்கின்றனர்?

அந்த எதிர்க்கட்சிப் பாத்திரத்தைத் திறம்பட வகிக்கத்தான்—ஆளும் கட்சியின் அலங்கோலங்களை அம்பலப்படுத்தத்தான் — சனநாயகக் கடமையினை நிறைவேற்றத்தான், வெற்றி தோல்வி குறித்துக் கவலை கொள்ளாது, நமது கழகம் பொதுத்தேர்தலில் ஈடுபடுகிறது.

நமது நோக்கம், தூய்மையானது என்பதை நாட்டவர் மெய்ப்பிக்கத்தான் போகிறார்கள்.

தோல்விகளைக் கண்டு அஞ்சிடாது தேர்தலில் ஈடுபடுவதுதான், பெற்றுள்ள சனநாயக உணர்வுக்கு எடுத்துக்காட்டாக இருக்கமுடியும்.

டாக்டர் அம்பேத்கார் அவர்கள், 'தேர்தலில் தோற்றுப் போவேன் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்; என்றாலும போட்டியிடப் போகிறேன்,' என்று கூறியிருப்பது, இங்கு கருதத்தக்கது.

'ஆளும் கட்சியான காங்கிரஸ் எதேச்சாதிகாரப் போக்கில் சென்று கொண்டிருக்கிறது,' என்று எச்சரிக்கிற அவர், ஆளும் கட்சியின் அந்த எதேச்சாதிகாரப் போக்கைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிக்குத் தனது பங்கினை ஆக்கபூர்வமாகச் செலுத்த முன்வந்திருக்கிறார் என்பதே, 'தோல்வியானாலும் தேர்தலில் ஈடுபடப் போகிறேன்,' என்று அவர் கூறியுள்ளதின் உண்மையான பொருளாகும்.

தி. மு. கழகமும், 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற இலட்சியத்தைக கொண்டுள்ள தென்றாலும், தேர்தலில் ஈடுபடுவதற்குரிய தலையாய காரணம், 'நாட்டில், உண்மையான சனநாயகம் தழைக்கவேண்டும்; ஆளும் கட்சியின் சர்வாதிகாரம் — எதேச்சாதிகாரம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்' என்ற சனநாயக உணர்வு தான்.

'எதிர்க் கட்சி ஏற்பட வேண்டும்' என்ற கருத்தை வலியுறுத்தி ஜான்மத்தாய் அவர்கள் அண்மையில் பேசியுள்ளார். அவர், அப்படி ஒரு எதிர்க் கட்சி உருவாவதற்குக் காட்டியுள்ள வழி, ஒரு நல்ல தத்துவ அடிப்படை கொண்டது. ஆனால்...........!

நடைமுறையில், பிரகடனப் படுத்தப்பட்ட தேசியத் தலைவர்களாக விளங்கும் காங்கிரஸ் கட்சியின் மேல்மட்டத் தலைவர்களில் ஓரிருவர்கூட, மத்தாய் போன்ற நல்லெண்ணம் கொண்டவர்களது கருததுக்கு மதிப்பளிப்பார்களா என்பது சந்தேகத்திற்குரியதே! ஏனெனில், காங்கிரஸ் தலைவர்கள், 'தேசீயத் தலைவர்'களாக மாறிடுவார்களேயானல், 'தனிநபர் பூஜா உணர்ச்சியின் அடிப்படையில் காங்கிரஸ் இயங்குகிறது' என்று டாக்டர் அமபேதகார் சுட்டிக்காட்டியுள்ள காரணத்தினல், காங்கிரஸ், ஒரு கட்சி எனற நிலையிலிருநது அழிந்து ஒழிந்துவிடும் என்பது, அநதத் தலைவர்களுக்குத் தெரியும்; அவர்களைவிட்டால், காங்கிரசுக்கு வேறு கதியும் இல்லை. ஏனெனில், தலைமைப் பொறுப்பேற்கக்கூடிய இளந்தலைமுறையினரை ஆகர்ஷிக்கக் கூடியனவாகக் காங்கிரசின் போக்கு இன்று இல்லை.

எனவே, ஜான் மத்தாய் வழங்கியுள்ள கருத்து, நல்ல இலட்சிய நோக்குடையது என்றபோதிலும, நடைமுறைக்கு வரக்கூடியது என்று நாம கொள்வதற்கு இல்லை.

'வட நாட்டைப் பொறுத்து, காங்கிரசின் நோக்கங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்ட நோக்கங்களோடு, இனிமேல்தான புதிய கட்சிகள் உருவாக வேண்டியுள்ளது,'— என்ற கூற்று எவ்வளவு தூரம உண்மை என்பதை வரப்போகும் பொதுத் தேர்தலுக்குப் பிறகுதான் கூறமுடியும.

தென்னாட்டை— தமிழகத்தைப் பொறுத்து 'அகில இந்தியா' என்று பேசுகிற எந்த ஒரு கட்சியும், அது எத்தனைதான் கவர்ச்சிகரமான கோஷங்களை மக்கள் முன்வைப்பதானாலும், மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகி, நல்ல எதிர்க்கட்சி என்ற நிலையை அது இனி எய்திவிட முடியாது என்பது மட்டும் திண்ணம்.

'ஆளும் கட்சியும் அரசாங்கமும் ஒன்றாகவே கருதப்படுகின்றன'

'எதிர்க் கட்சி இருப்பதாகவே மக்கள் எண்ணவில்லை'

ஜனநாயகம் தழைக்க ஜான் மத்தாய் கூறும் வழி

"ஆளும் கட்சியினுள் ஏற்பட்டுள்ள தனித்தன்மை பொருந்தியத் தலைமையின் காரணமாக இந்தியாவில் பலமான எதிர்க் கட்சி ஏற்படுவதோ, மாற்று அரசாங்கம் ஏற்படுவதோ சிரமமான காரியமாகிவிட்டது. இதன் காரணமாக, கோள்கை சம்பந்தப்பட்ட அளவில், வேறுபட்ட இரு கருத்துக்களிடையே ஒன்றைத் தேர்ந்தெடுத்துக்கோள்ளக்கூடிய உரிமையை சாதாரணக் குடிமகன் இழந்துவிடுகிறான். அது மட்டுமலல; அரசாங்கத் திட்டங்களோ, மசோதாக்களோ தோற்றுவிடும்போது, குடிமக்களுக்கு ஆளும் கட்சி மீது ஆத்திரம் வருவதில்லை; அவர்களுடைய ஆத்திரம் எல்லாம் நாட்டின் மீதும், அரசியல் அமைப்பின் மீதும்தான் திரும்புகின்றன,"

என்று, முன்னாள் மத்திய நிதி அமைச்சரான டாக்டர் ஜான் மத்தாய், பம்பாய் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா பேருரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டுவிட்டு மேலும் சொன்னார்:—

"எதிர்க்கட்சி ஒன்று இருப்பதாகவே தெரியாத காரணத்தால், தற்போது ஆட்சியில் இருக்கும் கட்சியும்—அரசாங்கமும் ஒன்றாகவே கருதப்படுகின்றன. அரசாங்கத்தின் நலனுக்கும், கட்சியின் நலனுக்கும் இடையே வேறுபாடு தெரியாமல் போய்விடுகிறது.

"தற்போது நிலவிவரும் நிலையை நாம் ஏற்றுக்கொண்டுவிட்டோம்; அதிலுள்ள ஆபத்தைப்பற்றிச் சிந்திக்கத் தவறிவிட்டோம்.

"பாராளுமன்ற முறையை அடிப்படையாகக் கொண்டு இந்தியாவில் கட்சிகள் இயங்குவதற்கு வழி வகுக்க வேண்டுவது தற்போதுள்ள இந்திய தேசியத் தலைவர்களின் பொறுப்பாகும். அத்தகைய கட்சி முறை இல்லாவிட்டால் பாராளுமன்ற அரசாங்கமோ, பாராளுமன்ற அமைப்போ பாதுகாப்பாக இராது.

"அரசியல் கருத்துக்களில் மாற்றம் ஏற்படுவதற்கு ஒரு மாற்று வழி ஏற்படவேண்டும்; அவ்வாறு செய்ய வேண்டுமானல், தற்போது உள்ள தேசியத் தலைவர்கள் கட்சி அரசியலிலிருந்துவிலகி, தற்போது ஆளும் கட்சியிலுள்ள பல்வேறுபட்டக் கருத்துக்கள் கொண்டவர்கள் புதிய அமைப்பு முறையில் உருவாவதற்கு வழி வகுக்க வேண்டும; அந்தத் தலைவர்கள், கட்சித் தலைவர்கள் என்ற ரீதியில் இல்லாது, தேசியத் தலைவர்கள் என்ற ரீதியில் பணியாற்ற வேண்டும்.

"வெள்ளையர்கள் சென்ற பின்பு நாட்டில் பிரிவு மனப்பான்மை தலைதூக்க ஆரம்பித்துவிட்டது; அத்தகைய மனப்பான்மை அதிகம் வளரமுடியாதவகையில் தடுப்பதில் தறபோதைய தேசீயத் தலைமை வெற்றி பெற்றுள்ளது; ஆனல் இந்தத் தலைமை எப்போதும் நீடித்திருக்கும் என எதிர்பார்க்க முடியாது; எனவே, இது பற்றி சிந்தனையாளர்கள் ஒன்றுகூடிச் சிந்திக்க வேண்டும."

உலகத்தையே புரட்டிவிட முடியுமாம்!

நியூயார்க், அக். 18—

உலகத்தை அதன் அச்சிலிருந்து 16 டிகிரி சாய்த்துவிடக் கூடிய சக்தி வாய்ந்த நீர்வளிக் குண்டுகள் அமெரிக்காவிடம் இருப்பதாக அமெரிக்க உப-ஜனாதிபதி தேர்தலுக்கு நிற்கும் கெபாவர் என்பவர் தெரிவித்துள்ளார்.

வறண்ட பகுதிகளை வளப்படுத்த......!

'வீணாகும் ஆற்றுநீரை சென்னைக்குத் திருப்பவேண்டும்'

கோவை, அக். 12—

"கேரள, ஆந்திர மாநிலங்களிலுள்ள ஆற்று நீரில் பெரும்பாலும் கடலில் விழுந்து வீணாகிறது; வீணாகும் அந்த நீரை சென்னை மாநிலத்திற்குத் திருப்பிவிட்டு இங்குள்ள ஏராளமான வறண்ட பகுதிகளை வளப்படுத்த அந்த இரண்டு மாநிலங்கள் உதவி புரியாவிட்டால், வளர்ந்துவரும் மக்கள் தொகைக்குத் தேவையான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்ய சென்னை மாநிலத்தால் இயலாது போய்விடும்,"

என்று, நீர்ப்பாசன தலைமைப் பொறியியல் வல்லுநர் ஆனந்தராவ் கூறியுள்ளார்.

மேற்கு மலைகளிலிருந்து கேரள மாநிலம் வழியாகக் கோவை, மதுரை, நெல்லை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கு நீர் திருப்பி விடப்பட வேண்டும். இதற்காக உருவாக்கப்பட்டுள்ள பரம்பிக்குளம்—அழியாறு திட்டமே மிகப் பெரிய திட்டமாகும். இந்தத் திட்டத்தின் மூலம் 3,50,000 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும்.

இந்தத் திட்டம் இரு கட்டங்களாக மேற்கொள்ளப்படும். முதல் கட்டம் முடிவடைய ரூ. 7 கோடி செலவாகும். இரண்டாவது கட்டத்திற்கு ரூ 25 கோடி செலவாகும்.

இந்தத் திட்டத்தின் மூலம் 1,50,000 கிலோவாட் மின்சாரமும் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

நிலமில்லா விவசாயிகளுக்கு.....!

சர்க்கார் புறம்போக்கு நிலம் தர மகஜர்

வேலூர், அக். 15—

வடஆற்காடு மாவட்டக் கலெக்டர் திரு என். கிருஷ்ணசாமி அவர்களை, வாணியம்பாடி பகுதி விவசாயிகள் சங்கச் செயலாளர் தோழர் வி. என். தத்தப்பன் சந்தித்து, வாணியம்பாடி பகுதியில் எளையாகரம் மேலக்குப்பம் கிராமத்தில் உள்ள 500 ஏகர் சர்க்கார் புறம்போக்கு நிலத்தைக் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்ய நிலமில்லா விவசாயிகள் 100-பேருக்குத் தலா 5 ஏகர் வீதம் கொடுக்கும்படி மகஜர் தந்தார். கலெக்டர் அம்மகஜரை ஏற்று, ஆவன செய்வதாக வாக்களித்துள்ளார். (ந. - நி.)

ஏகாதிபத்தியத்தின் மனித வேட்டை

அல்ஜீரியாவில் தினம் நடைபெறும் படுகொலைகள்

அல்ஜியர்ஸ், அக். 17—

கடந்த இருபத்திநான்கு மணி நேரத்தில் மட்டும் விடுதலைகோரும் தீவிர அல்ஜீரியவாதிகளில் 65 பேர்களைப் பிரெஞ்சு ஏகாதிபத்தியத் துருப்புகள் கொன்று குவித்துள்ளனவாம்.

பிரெஞ்சு ஏகாதிபத்தியம் அல்ஜீரியாவில் நடத்திவரும் மனித வேட்டை நாளுக்கு நாள் அதிகரித்துவருவதை, ஒவ்வொரு இருபத்திநான்கு மணி நேரத்திற்கும் தரப்படும் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை சொல்லிக் கொண்டிருக்கிறது.

தொழிலாளர் அரசாங்க இன்சூரன்ஸ் திட்டம்

குடும்பங்களுக்கும் பரவலாக்கப் படும்

1948-ல் நிறைவேற்றப்பட்ட தொழிலாளருக்கான இன்சூரன்ஸ் திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் மருத்துவ உதவியை, இன்சூர் செய்து கொண்டிருப்பவர்களின் குடும்பத்திற்கும் அளிப்பதற்கு மத்திய சர்க்கார் தீர்மானித்துள்ளதாம்.

இதனால் மேலும் 30 இலட்சம் பேர் பயனடைவார்கள் என்று கருதப்படுகிறது.

தற்போது நாட்டில் 39 இடங்களில் சுமார் 10 இலட்சம் பேருக்கு இந்தத் திட்டம் அமுல் நடத்தப்படுகிறது.

கள்ளச் சாராயம்

'குடிசை தொழில்' ஆகியிருப்பதை அவர் அறியாரோ!

சென்னை, அக். 16—

"மதுவிலக்குக் கொள்கையால் சர்க்காருக்கு நஷ்டம்தான் என்றாலும், ஏழை எளியோருக்குக் கொஞ்சம் பணம் மிச்சமாவதை நினைத்தால் திருப்திகரமாகவே இருக்கிறது,"

என்று, சென்னையில், அட்லி பிரபு குறிப்பிட்டாராம்.

மகளிர் மன்றச் செயற்குழுக் கூட்டம்

நவம்பரில் மன்றத் துவக்க விழா

11—10—56 மாலை 6 மணிக்கு மகளிர் மன்ற அலுவலகத்தில் செயற்குழுக் கூட்டம் தோழியர் சத்தியவாணி முத்து தலைமையில் கூடியது. கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன :—

நவம்பர் முதல் வாரத்தில் துவக்க விழா நடத்துவது.

பெண்கள் முன்னேற்றத்திற்கும், சமுதாய நலனிற்கும் பெரிதும் உழைத்தவரும் மூவலூர் மூதாட்டி இராமாமிர்தத்தம்மையார், சென்னை டாக்டர் எஸ். தர்மாம்பாள் அம்மையார் ஆகியோருக்கு மன்றத் துவக்க விழாவில் அவர்கள் சேவையைப் பாராட்டிப் பாராட்டுரை வழங்க வேண்டும்.

கொள்கைவீரன் கே. வி. கே சாமியின் படுகொலைச் செய்தி கேட்டு மிக வருந்துவதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கு மன்றச் சார்பில் தன் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

செயற்குழுவில் மேலும் சேர்க்கப்பட்ட கீழ்க்கண்ட தோழியர்களைச் செயற்குழு அங்கீகாரம் செய்துகொண்டது :— டி. எஸ். துரையம்மாள், வி. இரத்தினம் செயராமன் (சேலூர்), தனலட்சுமி குப்புசாமி, அம்மாபெண்ணு ஆறுமுகம்.

கூட்டத்திற்குத் தோழியர் புவனேசுவரி நடராசன், ஜெகஜோதி நாகராசன், பேச்சியம்மாள் பொன்னுசாமி, கே. வெற்றிச்செல்வி, சி. ஆர். கமலா பாலசுந்தரம், இராசம்மாள், தனலட்சுமி, கிருஷ்ணவேணி பாலன், அம்மா பெண்ணு, கலைச்செல்வி, ஆர். திராவிடச் செல்வி ஆகியோர் வந்திருந்தனர்.

★

மாதர்குலம் விழிப்புற்றெழ மகளிர் மன்றத்தில் உறுப்பினராவீர்!

தாய்மார் தம் எழுச்சிக்கு வழிகோல சென்னையில் துவக்கப்பட்டுள்ள மகளிர் மன்றத்தவர், தாயகத்துத் தாய்மார்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளினைக் கீழே தருகிறோம். தாய்க்குலத்தின் விடுதலையை விரும்பும் அனைவரும், சென்னை—1, எண் 179, போர்ச்சுகீஸ் சர்ச் தெருவில் உள்ள மகளிர் மன்றத்தோடு தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

வேண்டுகோள்

“தாய்மார்களே, தோழியரே! பெண்கள் சமூகத்தவரின் முன்னேற்றத்திற்காகப் பணியாற்றுவதற்காக 21-8-56-ல் சென்னையில் ‘மகளிர் மன்றம்’ துவக்கப்பட்டு, தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அதன் கிளைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. நூற்றுக்கணக்கான தோழியர் உறுப்பினர்களாகச் சேர்ந்து வருகின்றனர்.

“எந்தெந்தத் துறைகளில் எப்படி எப்படிப் பணியாற்றினால் மாதர் குலம் விழிப்புற முடியும் என்பதறிந்து அத்துறைகளில் ஈடுபட்டு அரும்பணியாற்ற இச்சங்கம் முடிவு செய்துள்ளது.

“கல்வி அறிவு அளிக்க இலவச வகுப்புகள் நடத்துவது, சொற்பயிற்சி தருவது, தையற்கலை நுணுக்கங்கள் தருவது, தவறிய பெண்களுக்கு வாழ்வளிப்பது, வாசகசாலைகள் நடத்துவது, நூல் நிலையங்கள் அமைத்து படிக்கும் பழக்கத்தை வளர்ப்பது, குறள், புறநானூறு, அகநானூறு போன்ற தமிழ் இலக்கியங்களைக் கற்றுப் பயன்பெறச் செய்வது, குடும்பக் கட்டுப்பாடு, சமுதாயப் பணி புரியப் பயிற்சி தருவது, நாட்டு விடுதலைப் பணியில் ஆதரவு தருவது போன்ற பணிகளில் ஈடுபட இம்மன்றம் முடிவு செய்துள்ளது.

“பெண்கள் சமுதாய முன்னேற்றம் கருதி ஏற்பட்டுள்ள இம்மன்றத்தில் மகளிர் அனைவரும் உறுப்பினர்களாகி, இதனை மேலும் மேலும் வளர்த்தால், மன்றம் மேலும் பல தொண்டுகள் செய்ய எளிதாக இருக்கும். எனவே, தாங்கள் அனைவரும் தவறாமல் மன்ற உறுப்பினராகி, மன்றப் பணிகளில் பங்கேற்குமாறு பணிவுடன் வேண்டிக் கொள்கிறோம்.”

வெற்றிச்செல்வி—அன்பழகன்
புவனேசுவரி—நடராசன்
செயலாளர்கள்

சத்தியவாணிமுத்து
தலைவர்

ஆத்தூர் வட்டத்தில்

க. அன்பழகன்,
எம். பி. சுப்பிரமணியம்

பெத்தநாய்க்கன்பாளையம்:

18—9—56 காலை 10 மணிக்கு, பெத்தநாய்க்கன்பாளையம் தோழர் அ. வேலுசாமி மறைவு குறித்து நீத்தார் நினைவு நாள் பொதுக் கூட்டம் தோழர் எம். பி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் க அன்பழகன், ஆனைமுத்து, எம். குப்புசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சின்னகிருஷ்ணபுரம் :

18—9—56 மாலை 6 மணிக்கு, சின்னகிருஷ்ணபுரம் தி. மு. கழகத் துவக்க விழா, தோழர் எம். பி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. தோழர் ஆனைமுத்து கழகக் கொடி ஏற்றினர். தோழர் குப்புசாமி சிறிது நேரம் பேசின பின், தோழர் க. அன்பழகன் சொற்பொழிவாற்றினர்.

புனவாசல் :

19—9—56 காலை 10 மணிக்கு, புனவாசல் தி. மு. கழகத் திறப்பு விழா தோழர் சின்னுசாமி தலைமையில் தோழர் க. அன்பழகன் துவக்கி வைத்தார். தோழர் எம். பி. சுப்பிரமணியம் கழகக் கொடியை ஏற்றுவித்தார். தோழர்கள் க. அன்பழகன், ஆனைமுத்து, குப்புசாமி, மாரிமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

ஆத்தூர் உயர்நிலைப் பள்ளி:

19—9—56 மாலை 5 மணிக்கு, ஆத்தூர் உயர்நிலைப் பள்ளியில் பள்ளித் தலைமை ஆசிரியர் தொ. ச. முத்துசாமி தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் தோழர் க. அன்பழகன் ‘வள்ளுவர் வழி’ எனுந்தலைப்பில் சொற்பொழிவாற்றினர்.

சந்தைப்பேட்டை :

அன்று இரவு 7 மணிக்கு, ஆத்தூர் சந்தைப்பேட்டையில் திராவிட நாடு விடுதலை நாள் பொதுக் கூட்டம் தோழர் அரங்கசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் க. அன்பழகன், எம். பி. சுப்பிரமணியம், எம். குப்புசாமி, ஆனைமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் அன்பழகனுக்கு ஆத்தூர் நகர தி. மு. கழகத்தின் சார்பில் கைத்தறித் துண்டும், ட லைவாடி, பழனியாபுரி, ஆனைய. மபட்டி, நரசிங்கபுரம், 74 கிருஷ்ணபுரம் போன்ற பல கிளைக் கழகங்கள், ஆத்தூர் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் ஆகியோர் சார்பாகவும் வாழ்த்து இதழ்களும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன. தேர்தல் நிதிக்காகப் பழனியாபுரம் தி. மு. கழகச் செயலாளர் ரூ. 1—1—0 நன்கொடையாக அளித்தார்.

இட்லர் என்ன ஆனர்?

பான், அக். 17—

இட்லர் இறந்துவிட்டார் என்பதை ஆதாரங்களுடன் உறுதிப்படுத்தும் ஒரு அறிக்கை இம்மாதம் 25-ந் தேதி வெளியிடப்படுமென்று தெரிகிறது.

வெற்றிலைக்கொடி நோயை தடுப்பதற்குத் திட்டம்

சேலம், அக். 15—

காவேரிக் கரையோரத்தில் ஐந்தாண்டுக் காலமாக வெற்றிலைக் கொடி நோய் நீடித்து வருகிறது; இதைத் தடுப்பதற்காக ஒரு ஏக்கர் நிலத்தை மூன்றாண்டு காலத்திற்குக் குத்தகை எடுத்து ஆராய்ச்சி நடத்தி, நோய்த் தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கப்படும் என்று தெரிகிறது. இதற்காக மாநில ஆட்சியினர் ரூ. 41,000 செலவு செய்ய முடிவு செய்துள்ளனராம்.

தூயஸ் பேச்சுக்கள்

ஜினீவாவில் நடைபெறும்

கெய்ரோ, அக். 17—

சூயஸ் சிக்கல் பற்றி பிரிட்டன்—பிரான்ஸ்—எகிப்து ஆகிய நாடுகளின் வெளிவிவகார இலாகா மந்திரிகள் இன்னும் ஒரு வாரம் அல்லது பத்து நாட்களுக்குள் அனேகமாக ஜினீவாவில் கூடி பேச்சுவார்த்தைகள் நடத்துவர் என்று நாசரின் அரசியல் ஆலோசகரான அலிசாப்ரி கூறியிருக்கிறார்.

வெறும் செய்திதானே!

புதுடில்லி, அக். 16—

தென் ஆப்பிரிக்காவில், அரசாங்கத்தின் இனவெறிக் கொடுமைக்கு கடல் கடந்து சென்று வாழும் இந்தியர்கள்—அதுவும் முக்கியமாகத் தமிழர்கள் ஆளாக்கப்பட்டுள்ளனர். ஊருக்கு அப்பால் குடியேற்றப்பட்டும், எந்தவிதச் சொத்துரிமையும், தொழில் நீடிப்பு வகையும் அற்றுத் தவிப்போருக்கு, இந்தியக் காங்கிரஸ் தலைவர் பரிகாரம் தேடிவிட்டார்.

“தென்ஆப்பிரிக்க சர்க்காரின் இனவெறிக் கொடுமைக்குப் பணியக்கூடாது; அதை முழு பலத்துடன் எதிர்க்க வேண்டும்” என்ற செய்தியை தென்ஆப்பிரிக்க இந்திய காங்கிரஸ் மாநாட்டுக்கு அவர் அனுப்பியுள்ளார்.

ஜெர்மானியப் பெண்மணி

‘உலக அழகி’யாகத் தேர்வு

ஜெர்மனியைச் சேர்ந்த 23 வயதுடைய பெத்ரா சர்மன் என்னும் பெண்மணி, ‘உலக அழகி’யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

இலண்டனில் நடைபெற்ற இந்தப் போட்டியில் 24 நாடுகளிலிருந்து வந்த அழகிகள் கலந்துகொண்டனர். ரூ. 6,600 மதிப்புள்ள வெள்ளி மலர்க் கேடயமும், ரூ 13,300 மதிப்புள்ள ஒரு காரும் உலக அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அப்பெண்மணிக்குப் பரிசாக அளிக்கப்பட்டது.

திருத்தம்

15-10-56 ‘நம் நாடு’ இதழ் (சென்னைப் பதிப்பு) மூன்றும் பக்கம் முதல் கலத்தில் ‘அறந்தாங்கி தி. மு. கழகத்துவக்கவிழா’ என்றிருக்கும் தலைப்பினை, ‘மணமேல்குடி தி. மு. கழகத் துவக்க விழா’ என்று திருத்திப் படித்துக் கொள்ளவும்.

அதே கலத்தில் ‘திருத்துறைப் பூண்டி தி. மு. கழகம்’ என்றிருப்பதை, ‘பழையங்குடி தி. மு. கழகம்’ என திருத்திப் படித்துக் கொள்ளவும்.

ஆலை முதலாளிகளுக்குச் சலுகை?

உற்பத்தி அதிகரிப்பு என்ற பெயரால் டில்லி காட்டும் பரிவு!

புதுடில்லி, அக். 17—

துணி உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்கு என்று கூறி, ஆலைகளுக்கு ‘எக்ஸைஸ்’ வரி விதிப்பை கெசத்திற்கு அரையணா குறைப்பதாக டில்லி சர்க்கார் அறிவித்திருந்தனர்.

அதாவது, 1956 சனவரி முதல் ஆகஸ்டு முடிய உள்ள 8 மாதங்களில், ஒரு ஆலை தனது மாத சராசரி உற்பத்தியைவிட அதிகம் உற்பத்தி செய்தால், அப்படி உற்பத்தியாகும் ஒவ்வொரு கெஜம் துணிக்கும் ‘எக்சைஸ்’ வரியில் அரையணா குறையும் என்றும், இந்தச் சலுகை 1956 டிசம்பர்வரை தரப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இப்போது, இந்தச் சலுகை 1957 மார்ச் திங்கள் முடிய உற்பத்தியாகும் துணிகளுக்கும் தரப்படும் என்று டில்லி அறிவித்துள்ளதாம்!

இரு மொழி பம்பாய் மாநில முதன் மந்திரி

மராட்டியரான சாவன் தேர்வு

நவம்பர் முதல் தேதி அமையப் போகிற புதிய இருமொழி பம்பாய் மாநிலத்தின் முதன் மந்திரியாக யஷ்வந்த்ராவ் பல்வந்த்ராவ் சாவன் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

தன்னைப் போட்டியின்றி ஒருமனதாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று இப்போதைய முதன் மந்திரி மொரார்ஜி தேசாய் விடுத்த வேண்டுகோளுக்குக் காங்கிரசார் செவி சாய்க்காது போகவே, அவர் தனது அபேட்சையைத் திரும்பப் பெற்றுக்கொண்டாராம்.

இப்போதைய பம்பாய் மாநிலம், ஐதராபாத்திலிருந்து வருகிற மராத்வாடா பகுதிகள், விதர்ப்பம், சௌராஷ்டிரம், கட்ச் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் 472 பேர்களில் 446 பேர்கள் தலைவர் தேர்தலில் கலந்துகொண்டிருக்கின்றனர்.

முதன் மந்திரியாயுள்ள மொரார்ஜி தேசாய், ரெவினியூ மந்திரி ஹிரே, ஸ்தல ஸ்தாபன மந்திரி சாவன் முதலியோரது பெயர்கள் கட்சித் தலைவர் பதவிக்காகப் பிரரேபிக்கப்பட்டன.

தேசாய் தனது அபேட்சையைத் திரும்பப் பெற்றுக்கொண்டதும், தேர்தல் நடைபெற்றதில் சாவனுக்கு 333 வாக்குகளும், ஹிரேவுக்கு 111 வாக்குகளும் கிடைத்திருக்கின்றன.

நவம்பர் 1-ந் தேதி பெரிய இருமொழி மாநிலம் ஏற்படும்போது, சாவன், புதிய பம்பாய் மாநிலத்தின் முதலமைச்சர் பதவியை ஏற்பார்.

அவரைப் பற்றி......!

42 வயதான சாவன் தமது 16-வது வயதிலேயே அரசியலில் ஈடுபட்டவர்; பள்ளியில் படித்துக் கொண்டிருந்த நாட்களிலேயே ஒத்துழையாமை இயக்கத்தில் பணியாற்றியமைக்காக 18 மாதச் சிறைத் தண்டனை அடைந்தவர்; பின்னர் 1938-ம் ஆண்டில் பி. ஏ. பட்டமும், 1941-ல் சட்டப் பயிற்சிக்கான பட்டமும் பெற்றவர்.

இடைக்காலத்தில், காலஞ்சென்ற எம். என். ராயினுடைய ‘ரேடிகல் ஜனநாயகக் கட்சி’யில் சிறிதுகாலம் இருந்த அவர், 1942ம் ஆண்டுப் போராட்டங்களின் போது மீண்டும் காங்கிரசில் சேர்ந்து தீவிரமாகப் பணியாற்றியிருக்கிறார்.

இவரைப் பிடித்துக் கொடுப்போருக்கு ஆயிரம் ரூபாய் பரிசு தரப்படும் என்று வெள்ளையர்கள் அறிவித்து, இவரை 1942-ல் கைது செய்து 1944 வரை சிறை வைத்திருந்தனர்.

பின்னர் இவர், சதாரா மாவட்ட காங்கிரஸ் தலைவராகவும், மராட்டியப் பிரதேசக் காங்கிரஸ் செயலாளராகவும் பதவி வகித்திருக்கிறார்.

1946 ல் சட்டசபை புகுந்த இவர், 1952-ம் ஆண்டுத் தேர்தலுக்குப் பிறகு மந்திரியாக்கப்பட்டார்.

‘சம்புக்த மராட்டியத்தைவிட எனக்கு இந்தியாவின் நலன்களே பிரதானமானவை’ என்று கூறியும், இரு மொழி பம்பாய் மாநில அமைப்பை முதன் முதல் வரவேற்றும் இருக்கிறார், இவர்!

சென்னை ஓட்டல் முன் மறியல்

கோரிக்கைகளுக்காகத் தொழிலாளர் நடவடிக்கை

சென்னை, அக். 17—

சென்னை ஓட்டல் தொழிலாளர் சங்கத்தினரின் செயற்குழுக் கூட்டம் நேற்று மாலை, சங்கக் கட்டடத்தில் திரு ஆர். இராமநாதன் தலைமையில் நடைபெற்றபோது சென்னை ‘நியூ பிரிமியர் கேப்’ முன்னர், வருகிற திங்கட்கிழமை முதல் மாலை 5 மணியிலிருந்து 7மணிவரை, இரண்டிரண்டு பேராகச் சேர்ந்து அமைதியான முறையில் மறியல் செய்வதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

அந்தச் சங்கத்தைச் சேர்ந்திருந்த அந்த ஓட்டல் தொழிலாளர்கள் சிலர் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருந்தனர். அவர்களைத் திரும்ப வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற தொழிலாளர் கோரிக்கையை அந்த ஓட்டல் நிர்வாகத்தினர் மறுத்ததின் விளைவாக எழுந்துள்ள நிலை குறித்தும், அந்த ஓட்டலில் பணியாற்றும் எல்லாவிதத் தொழிலாளருக்கும் தரப்படும் ஊதியத்தை நிர்ணயிக்க வேண்டுமென்ற கோரிக்கையைப் பரிசிலிக்கவும், 6 மாதத்திற்கு அதிகமாக அங்கு வேலை செய்பவரும் அனைவரையும் நிரந்தரத் தொழிலாளர்களாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கையினால் எழுந்துள்ள நிலைகள் குறித்து விவாதிக்கவும் நடைபெற்ற அக்கூட்டத்திலேயே மேற்கண்ட முடிவு மேற்கொள்ளப்பட்டது.

ஓட்டல் நிர்வாகிகள் தொழிலாளரின் கோரிக்கைகளை நிறைவேற்றும் வரையில் மறியல் தொடர்ந்து நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த திங்கள் 22-ந் தேதியன்று நடைபெற்ற ஜார்ஜ் டவுன் பகுதி ஓட்டல் தொழிலாளர் சங்கச் செயற்குழுக் கூட்டத்தின்போது, ஏற்கனவே, நிரந்தரமாக வேலை செய்யும் தொழிலாளர்களை நிரந்தர தொழிலாளர்களாக ஏற்றுக் கொள்ளாமலும், அவர்களைப் பழிவாங்கும் போக்கில் கடைகளின் பெயர்களை மாற்றி தினக்கூலி அடிப்படையில் தொழிலாளர்களை வைத்துக் கொள்வதைக் கண்டித்தும், ஓட்டல்தொழிலாளர் சட்டத்தை ஓட்டல் தொழிலாளர்சங்கங்களைகலந்தாலோசித்து தாமதம் செய்யாமல் கொண்டுவருமாறு சர்க்காரைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றியிருந்தது குறிப்பிடத்தக்கது.

அக்கூட்டத்தில் அத்தக்குடித் தோழர் கே. வி. கே. சாமி மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ச.-கி.)

தஞ்சை மாவட்டத்தில் 50 விதைப் பண்ணைகள்

தஞ்சை மாவட்டத்தில் 1956—57 ஆம் ஆண்டு 50 விதைப் பண்ணைகளை நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக திருப்பரங்கிடம் கலெக்டர் அறிவித்துள்ளார்.

கழகக் கூட்டங்கள்

★

சென்னை திருவல்லிக்கேணி

41-வது வட்ட தி. மு. கழக
முதலாண்டு நிறைவு விழா
வெங்கடரங்கம் பிள்ளைத் தெரு
(பஸ் ஸ்டாண்ட் அருகில்)
20—10—56 மாலை 6 மணிக்கு
தலைவர் : என். சீவரத்தினம்

பேசுவோர் :
அண்ணா
அலமேலு-அப்பாதுரை
இசை : நாகூர் அனிபா

★

சின்ன காஞ்சீபுரம் :

ஆலடி பிள்ளையார் கோவில் தெரு
21—10—56 மாலை 6 மணிக்கு
தலைவர் : அண்ணாமலை

பேசுவோர் :
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
முகவை ஆர்.எஸ். பாண்டியன்

★

ஏர்வாடி :

அண்ணா திடலில்
21-10-56 மாலை 8-30 மணிக்கு
தலைவர் : ஏ. ஜி. இராசன்

பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
என். பி. எம். அப்துல்காதர்
வி. வன்னியன்
பி. எம். அலியார்

ஆலந்தூர் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம்

21—10—56 இரவு 9 மணிக்கு. தி. மு. கழக மாடியில் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

மதுரை மாவட்டத்தில்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

உடையவர்கள் சேர்ந்தும் தெரிவித்தனர்.

வழக்கறிஞர் பார்த்தசாரதி (நாயுடு), டாக்டர் அருணாசலம் ஆகியோரும் ஆய்வுக் குழுவினரிடம் தங்களின் எண்ணங்களை அறிவித்தனர். இவ்விடம் ஆய்வுக் குழுவின் பணி பகல் 2-30 மணிக்கு முடிவுற்றது.

ஆய்வுக் குழுவின் வருகை நகரில், அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், ஆய்வுக் குழுவினர் விசாரணை நடத்தும் முறையை மண்டபத்திற்கு வெளியே கூடியிருந்த மாற்றுக் கட்சித் தோழர்களும் பாராட்டுகின்றனர்.

ஆய்வுக் குழுவினர் பிற்பகல் 4-30 மணிக்கு, மதுரையிலிருந்து விருதுநகருக்குப் புறப்பட்டுச் சென்றனர். மாவட்டச் செயலாளர் எஸ். முத்து, நகரச் செயலாளர் சேது ஆகியோரும், மற்ற கிளைகளின் தோழர்களும் உடனிருந்து வழி அனுப்பினர்.

★★★★★★★★★★★★★★★★★★★

ஆய்வுக்குழுவினரிடம் தேர்தல் நிதி அளிப்பு

தேர்தல் ஆய்வுக் குழுவினரைச் சந்திக்க வரும் கழகத் தோழர்கள், ஆதரவாளர்கள், பொது மக்கள் ஆங்காங்கு சிறு சிறு தொகைகளை ஆய்வுக்குழுவினரிடம் தந்து வருவதுடன், மேலும் தங்களின் பங்குக்குப் பெரும் நிதி திரட்டித்தர தயங்கமாட்டோம் என்று உறுதியளித்து வருகின்றனர்.

தேர்தல் நிதி

18—10—56 அன்று மதுரையில் தேர்தல் ஆய்வுக் குழுவினரிடம் தோழர் ஆ. இராசண்ணா அவர்கள் ரூபாய் 100 நன்கொடை அளித்தார். மற்றும் பலர் சிறு சிறு தொகைகள் அளித்தனர்.

சென்னை-சூளை தி. மு. கழக உறுப்பினர் கூட்டம்

21—10—56 மாலை 4 மணிக்கு, சென்னை 17-வது வட்டம் சூளை தி. மு. கழக உறுப்பினர் ஆறிமுகக் கூட்டம், தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெறும். உறுப்பினர்களுக்கு உரிமைச் சீட்டுகள் வழங்கப்படும். மாலை 5 மணிக்கு உறுப்பினர்களுக்குத் தேநீர் விருந்து நடைபெறும். தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றுவர்.

விசைத்தறி எதிர்ப்புப் பொதுக்கூட்டம்

21—10—56 மாலை 6 மணிக்கு, காவேயாலூர் அழகிரி திடலில் தி. மு. கழகச் சார்பில் தோழர் எம். முத்து தலைமையில் விசைத்தறித் திணிப்பு எதிர்ப்புப் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் இளஞ்செழியன், கருத்தோவியன், பாண்டியன், தோழியர்தேசியமணி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். அன்று மாலை தோழர் வி. கே. லால் தலைமையில் மௌன ஊர்வலமும் நடைபெறும்.

தமிழ் நாடு தோல் பதனிடும் தொழிலாளர் மாநாடு

21—10—56 காலை 9 மணிக்கு, பேர்ணாம்பட்டில் திரு. என். சிவராஜ் தலைமையில் மேற்படி மாநாடு நடைபெறும். திரு. பி. எஸ். இராசகோபால் எம். பி. அவர்கள் மாநாட்டைத் திறந்துவைப்பார்.

காலை 7 மணிக்கு பேர்ணாம்பட்டுத் தொழிற் சங்கக் காரியாலயத்திலிருந்து திரு எஸ் சி. ராஜு தலைமையில் ஊர்வலமும், மாலை 6-மணிக்கு மருத்துவ மனை எதிரிலுள்ள அம்பேத்கார் மைதானத்தில் பொதுக்கூட்டமும் நடைபெறும்.

திரு.வி.க., மறைமலை அடிகள், பாரதியார் நினைவு நாள் விழா

21—10—56 மாலை 4 மணிக்கு, சென்னை அண்ணாபிள்ளைத் தெரு பிரம்ம சமாஜப் பள்ளி மண்டபத்தில் மேற்படி விழா, திரு. எம். ஆர். சண்முகம் அவர்கள் தலைமையில் நடைபெறும். திரு. மயிலை சிவமுத்து அவர்கள் வரவேற்புரையாற்றுவார்; பலர் சொற்பொழிவாற்றுவர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமை நிலையச் செய்தி :

சென்னை மாவட்டத்தில் தேர்தல் ஆய்வுக்குழுவின் விசாரணை

28—10—56 ஞாயிறு காலை 'அறிவக'த்தில் நடைபெறும்

சென்னை மாநிலத்திலுள்ள எல்லாத் தொகுதிகளின் தேர்தல் சூழ்நிலையை அறியத் தேர்தல் ஆய்வுக் குழுவினர் 28-10-56 காலை 9-மணிக்கு, இராயபுரம் 'அறிவக'த்தில் தங்களின் பணியைத் துவக்குவார்கள்.

விசாரணை கீழ்க்கண்ட வரிசைப்படி நடைபெறும்.

ஒவ்வொரு தொகுதியிலுள்ள கிளைக் கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள் கழகத் தோழர்கள், ஆதரவாளர்கள், தேர்தல் சூழ்நிலையை தெரிவிக்கக்கூடிய முக்கியஸ்தர்கள் அனைவரும ஆய்வுக் குழுவின் முன் தங்களின் கருத்துக்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஒவ்வொரு தொகுதியிலிருந்துவரும் தோழர்கள் தேர்தலைப் பற்றிய விவரம் தருவதில் ஒத்த கருத்துடையவர்களாயிருப்பின் சேர்ந்தோ, இல்லையெனில் தனித்தனியாகவோ ஆய்வுக் குழுவின்முன் தங்களின் எண்ணத்தைத் தெரிவிக்கலாம். ஆய்வுக்குழுவின் பணி இனிது நிறைவேறும் வகையில், அந்தந்தத் தொகுதியிலிருந்து வரும் தோழர்கள், தேர்தல் சூழ்நிலை பற்றிய விவரங்களை அறிந்து வருமாறும் கேட்டுக்கொள்கிறோம.

★

1. வண்ணைத் தொகுதி :
புது வண்ணை, இராயபுரம், சிங்காரத்தோட்டம, சஞ்சீவிராயன்பேட்டை வட்டங்கள்.

2. ஆர்பர் தொகுதி :
ஏழுகிணறு, அம்மன்கோயில், முத்தியாலுப்பேட்டை, ஆர்பர், கச்சாலீஸ்வரர் கொத்தவால்சாவடி, சவுகார்பேட்டை, போர்ட்செயின்ட் ஜியார்ஜ் வட்டங்கள்.

3. பேசின்பிரிட்ஜ் தொகுதி:
கொருக்குப்பேட்டை, பேசின்பிரிட்ஜ், பெத்துநாய்க்கன்பேட்டை, டிவிலியன் பேசின், எடப்பாளையம வட்டங்கள்.

4. பெரம்பூர் தொகுதி :
வியாசர்பாடி, சூளை, புளியந்தோப்பு, பெரம்பூர் பாரக்ஸ், செம்பியம, அயனபுரம், புரசைவாக்கம், குயப்பேட்டை வட்டங்கள்.

5. ஆயிரம்விளக்குதொகுதி
சிந்தாபாக்கம், ஆயிரம் விளக்கு, நுங்கம்பாக்கம், இராயப்பேட்டை, புதுப்பாக்கம வட்டங்கள்.

6. எழும்பூர் தொகுதி :
வேப்பேரி, பெரியமெட்டு, பார்க் டவுன், நேப்பியர் பார்க், சிந்தாதிரிப்பேட்டை, கோமளீஸ்வரன்பேட்டை, எழும்பூர் வட்டங்கள்.

7. திருவல்லிக்கேணி தொகுதி :
திருவட்டீஸ்வரன் பேட்டை, சேப்பாக்கம், திருவல்லிக்கேணி, ஜாமபஜார், மீர்சாகிப்பேட்டை வட்டங்கள்.

8. மயிலாப்பூர் தொகுதி :
மயிலை வடக்கு, மயிலை தெற்கு, தேனாம்பேட்டை, அடையாறு வட்டங்கள்.

9. தியாகராயநகர் தொகுதி:
கோடம்பாக்கம், தியாகராய நகர் வடக்கு, தியாகராய நகர் தெற்கு, சைதாப்பேட்டை, கிண்டி வட்டங்கள்.

★

28—10—56 காலை 9 மணிக்குச் சரியாய் ஆய்வுக் குழுவின் பணி துவக்கப்படுமாதலால், அந்தந்தத் தொகுதியிலுள்ள தோழர்கள் குறித்த நேரத்திற்குள் 'அறிவகம்' வருமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தேர்தல் நிதி சிறப்புக் கூட்டம்

24—10—56 புதன் மாலை 5-30 மணிக்கு

சென்னை கோகலே மண்டபத்தில்

பேசுவோர் :

அண்ணா

இரா. நெடுஞ்செழியன்

என். வி. நடராசன்

ஈ. வெ. கி. சம்பத்

கே. ஏ. மதியழகன்

★

'தேர்தலும் தி. மு. கழகமும்'

என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவர்

★

நன்கொடை ரூ. 1. அணா 8.

குறிப்பு :—கூட்டத்திற்கான நுழைவுச் சீட்டுகளை 20—10—56 சனி முதல் காலை 10 மணியிலிருந்து மாலை 6-மணி வரையில் தி. மு. க. தலைமை நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தஞ்சை மாவட்டத்தில் திராவிட முன்னேற்றக்கழகத் தேர்தல் ஆய்வுக் குழு

"தஞ்சை மாவட்டத்தில் கீழ்கண்டபடி தேர்தல் ஆய்வுக்குழுக் கூட்டம் நடைபெறும் :—

"அறந்தாங்கி, அதிராம்பட்டினம், பட்டுக்கோட்டை, மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி (2) ஆகிய தொகுதிகளுக்கு 22—10—56 காலை 9-மணியளவில் பட்டுக்கோட்டை காசாங்குளம் வடகரைச்சத்திரம் ஓய்வு விடுதியிலும்,

"தஞ்சாவூர், கந்தர்வக் கோட்டை, திருவையாறு, பாபநாசம் (2), கும்பகோணம் ஆகிய தொகுதிகளுக்கு 22—10—56 மாலை 3 மணியளவில் தஞ்சாவூர் கொண்டிராசபாளையம் பொன்னுப்பூண்டார் சத்திரம் தண்ணீர்ப் பந்தலிலும்,

"மாயூரம், சீர்காழி (2), ஆடுதுறை, நன்னிலம, திருவாரூர் (2), நாகப்பட்டினம் ஆகிய தொகுதிகளுக்கு 22-10-56 மாலை 6 மணி அளவில், மாயூரம் சந்திப்பு பக்கம் முனிசிபல் ஓய்வு விடுதியிலும் நடைபெறும்.

"கிளைக் கழகச் செயலாளர்களும், மாவட்டப் பிரதிநிதிகளும், கழகப் பொது உறுப்பினர்களும தவறாது வருகை தந்து, தேர்தல் ஈடுபாடு குறித்து ஆய்வுரைகள் வழங்கிச் சிறப்பிக்க வேண்டுகிறேன்,"

—என்று தஞ்சை மாவட்ட தி. மு கழகச் செயலாளர் என். எஸ். இளங்கோ அறிவிக்கிறார்.

முதலூர் மறுமலர்ச்சி மன்றப் பொதுக்கூட்டம்

22—10—56 இரவு 8 மணிக்கு, முதலூர் பஸ் ஸ்டாண்ட் அருகில முதலூர் மறுமலர்ச்சி மன்றப் பொதுக்கூட்டம் நடைபெறும. தோழர் கி. மனோகரன் சொற்பொழிவாற்றுவார்.

கள்ளக்குறிச்சி வட்டக் கிளைச் செயலாளர்கட்கு :

21—10—56 காலை 9 மணிக்கு கள்ளக்குறிச்சி துருகம் ரோடில் உள்ள சத்திரத்தில் கள்ளக்குறிச்சி வட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். கள்ளக்குறிச்சி வட்டக் குழு அமைத்தல், 23—10—56ல் நடைபெற இருக்கும் தேர்தல் ஆய்வுக் குழுவினரிடம் வட்டக் குழுத் தீர்மானம் தெரிவித்தல் ஆகிய பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும,

திருச்சியில் தொழிலாளர் சங்க ஆண்டு விழா

21—10—56 காலை 9 மணிக்கு, திருச்சி தேவர் மன்றத்தில், திருச்சி மோட்டார் போக்கு – வரத்து பொதுத் தொழிலாளர் சங்க 6-வது ஆண்டு விழா திரு. எம். குழந்தைவேலு தலைமையில் நடைபெறும். தோழர் எஸ். சி. சி. அந்தோணி எம்.எல்.ஏ. விழா வினைத் துவக்கிவைப்பார். தோழர் எம். எஸ். மணி கொடியேற்றுவார். தோழர்கள் பி. வி. பண்டரிநாதன், எஸ். வி. இருதயமாணிக்கம் ஆகியோர் முறையே சம்மேளனத் தலைவர், மறைந்த தோழர் எஸ். இராமையா ஆகியோர் படங்களைத் திறந்துவைப்பர். தோழர்கள் வி. முனுசாமி எம்.பி., எஸ். பக்கிரிசாமி எம்.எல் ஏ., ஆர். நாகசுந்தரம் எம்.சி, பி. எம். கிருஷ்ணன், எஸ். இராகவானந்தம், ஐ. எம். ஷெரீப் ஆகியோர் பேசுவர். காலை 9 மணிக்கு இசை முரசு நாகூர்-அனிபா குழுவினரின் இசை நிகழ்ச்சியும், இரவு 10 மணிக்கு 'பரோபகாரி' நாடகமும் நடைபெறும்

உணவுப் பதுக்கலுக்கு...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

யான—சுலபமான போக்குவரத்து வசதி தாராளமாகக் கிடைக்க வேண்டும்.

"எங்களுக்குத் தேவையானது இவ்வளவு உணவுப் பொருள்கள்; இருப்பதோ இவ்வளவுதான்; இந்த அளவு பற்றாக்குறை இருக்கிறது; இறக்குமதிக்கான ஏற்பாடு செய்திருக்கிறோம்; இறக்குமதி ஆக இவ்வளவு நாள் ஆகும்' என்று சர்க்கார் பகிரங்கமாகத் தகவல் தருவது மிகப் பொறுப்பற்ற செயலாகும். இதனால், நிலபிரப்புக்களும் ஏராளமான பணமுடைய வியாபாரிகளும், பண்டங்களைப் பதுக்கி வைத்துக் கொள்ளை இலாபமடிக்க ஏதுவாகிறது.

"இப்போது உணவுப் பிரச்சினையைச் சர்க்கார் கையாண்டுவரும் முறை, பிரச்சினைக்குப் பரிகாரம் தேடுவதாக இல்லை."

திருமணம்

21—10—56 காலை 10 மணிக்கு ஆத்தூர் பூங்கோலய்யா தெருவில், தோழர் இளங்கோ—தோழியர் சந்திரா திருமணம் தோழர் எம். பி. சுப்பிரமணியம் எம். எம் ஏ., தலைமையில் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.